## விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு விபத்தில்

# பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதாந்திர உதவித் தொகை!

## அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்!

விருதுநகர், ஜூலை 24-

பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற விபத்துகளில் பெற்றோரை இழந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவிதொகைக்கான ஆணைகளை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 22.07.2025 அன்று தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துகளில் பெற்றோரை இழந்த தொழிலாளர்களின் 38 குழந்தைகளுக்கு மாந்தோறும் ரூ.2000 வீதம் மொத்தம் ரூ.5.20 இலட்சம் மதிப்பிலான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகைக்கான ஆணைகளை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் 10.11.2024 அன்று வெளியிட்ட அறிவிப்பின்படி, பட்டாசுத் தொழிற்சாலைகளில், ஏற்படுகின்ற விபத்துகளில் உயிரிழக்கின்ற தொழிலாளர்களின் குழந்தைகளுடைய உயர்கல்வி வரையிலான அனைத்துக் கல்விச் செலவுகளையும் அரசே ஏற்கும் என்றும், இந்த உதவிகளை மாவட்ட அளவிலேயே முடிவு செய்து வழங்கக்கூடிய வகையில், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் கீழ், இதற்கான ஒரு தனி நிதியம் ஒன்று உருவாக்கப்படும் என்றும் இதற்கான முதற்கட்ட உதவியாக ரூ.5 கோடி ரூபாயை அரசு வழங்கும் எனவும் அறிவித்தார்.

அதனடிப்படையில், பட்டாசுத் தொழிற்சாலை விபத்துக்களில் தாய், தந்தை இருவரில் எவரேனும் ஒருவர் மரணமடைந்த நிகழ்வில் பராமரிப்பு உதவித்தொகையாக (18 வயது பூர்த்தியாகும் வரை) மாதந்தோறும் ரூ.2000/-மும் மற்றும் தாய், தந்தை இருவரும் மரணமடைந்த நிகழ்வில் பராமரிப்பு உதவித்தொகையாக (18 வயது பூர்த்தியாகும் வரை) ரூ.4000/-மும் வழங்கப்படும்.

அதன்படி, விருதுநகர் மாவட்டத்தில், கடந்த பட்டாசு விபத்துக்களில் பெற்றோரை இழந்த தொழிலாளர்களின் 38 குழந்தைகளுக்கு நவம்பர் 2024 முதல் மே-2025 வரையிலான 7 மாதங்களுக்கான மாதாந்திர உதவித்தொகை ரூ.5.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதி கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையும் வழங்கப்படும்.

இதுபோன்று பட்டாசு தொழிற்சாலை விபத்துக்களில் உயிரிழக்கின்ற தொழிலாளர்களின் குழந்தைகளுடைய உயர்கல்வி வரையிலான கல்வி செலவுகளுக்கு தமிழ்நாடு அரசு என்றும் உறுதுணையாக இருக்கும் என மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் இணை இயக்குநர்கள் ஆர்.ரவிச்சந்திரன், பி.ராஜ்குமார், விருதுநகர் நகர் மன்ற தலைவர் மாதவன், பட்டாசு தொழிலாளர்களுடைய குழந்தைகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் இருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று முன்தினம் (22.07.2025) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துகளில் பெற்றோரை இழந்த தொழிலாளர்களின் 38 குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.2000 வீதம் மொத்தம் ரூ.5.20 இலட்சம் மதிப்பிலான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகைக்கான ஆணைகளை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

---

## வள்ளியூரில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ மாணவ, மாணவிகளிடம் விழிப்புணர்வு துண்டு பிரசுரம்!

## மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வழங்கினார்!

நெல்லை, ஜூலை 24 -

நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் மரியா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி முன்பு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் ஓரணியில் தமிழ்நாடு விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரம் 1000 த்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களிடம் வினியோகம் செய்யப்பட்டது.

திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி,நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சர்,கழக முதன்மை செயலாளருமான கே.என்.நேரு, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதன்படி கல்லூரி தோறும் கழக மாணவர் அணியின் விழிப்புணர்வு பிரச்சாரம் நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் இராதாபுரம் தொகுதி வள்ளியூர் திருச்செந்தூர் சாலையில் உள்ள மரியா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி முன்பு விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வு நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு தலைமையில் மாவட்ட துணைச் செயலாளர் நம்பி,மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர்,இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் 1000க்கும் மேற்பட்ட மாணவியர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பிரச்சாரத்தை மேற்கொண்டு துண்டு பிரசுரம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டது.அதில் இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு மட்டும்தான் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறது.போன்ற பல்வேறு கருத்துக்கள் அதில் இடம்பெற்றிருந்தன. அதனை மாணவிகள் படித்துக் கொண்டே கல்லூரிக்குள் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து இராதாபுரம் தொகுதியில் உள்ள தெட்ஷணமநாடார் கல்லூரி,நேரு நரசிங் கல்லூரி,ஹை டெக் பாலிடெக்னிக் உட்பட பல்வேறு கல்லூரிகளில் மாணவர், மாணவியர் களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்து வகையில் ஓரணியில் தமிழ்நாடு துண்டு பிரசுரம் விநியோகம் கழக நிர்வாகி களால் விநியோகம் செய்யப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மாடசாமி,துணை அமைப்பாளர்கள் அயப்பன்,ஆதி பாண்டியன்,இராதாபுரம் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கார்த்தி சுபாஷ், தகவல் தொழில் நுட்ப அணி விஜயன்,சுதாகர்,பேரூர் அவைத் தலைவர் அன்பரசு,ஒன்றிய கவுன்சிலர் ஜோசிஜின், மார்க்கெட் ராஜா,பேரூர் கவுன்சிலர்கள் மாடசாமி,ஆப்ரகாம், மாணிக்கம் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் தொகுதியில் உள்ள கல்லூரிகளில்

மாணவர்,மாணவியர்களிடையே ஓரணியில் தமிழ்நாடு விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. குறிப்பிடத்தக்கதாகும்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம் வட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியம், வாதலக்கரை ஊராட்சி, இடைச்சியூரணி கிராமத்தில் அனைத்து கிராமம் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.16.55லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். உடன் புதூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் செல்வராஜ், புதூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் மும்மூர்த்தி, விளாத்தி குளம் தெற்கு ஒன்றியச் செயலாளர் இம்மானுவேல் உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

**சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 2–இல் கீழ்க்கண்ட 3 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 26.07.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | பொன்னேரி | வெங்கடேஸ்வரா திருமண மண்டபம், பொன்னேரி, திருவள்ளூர். |
| 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | கும்மிடிப்பூண்டி | எஸ்.வி.கே.மஹால், சத்தியவேடு சாலை, கவரைப்பேட்டை, திருவள்ளூர். |
| 03.08.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | திருத்தணி | எஸ்.வி.கே.பேலஸ், திருத்தணி, திருவள்ளூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 22-07-2025

கலைஞர் 100
1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


# நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்!

## நேற்று முன்தினம் (22 – 7 – 2025) நிகழ்வுகள்!



**1. மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு எப்போது?**

**கனிமொழி கருணாநிதி கேள்வி!**



தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளை உறுப்பினர்களாக நியமிக்கும் சட்டத் திருத்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில்

இந்த விவகாரம் குறித்து ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சரிடம், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

பஞ்சாயத்துகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இடஒதுக்கீடு வழங்கிய மாநிலங்கள் எவை? இடஒதுக்கீடு செயல்படுத்தப்பட்ட ஆண்டு குறித்த தகவல்கள் என்ன?

அரசு நிர்வாகத்தில் மாற்றுத் திறனாளிகளின் பிரதிநிதித்துவம் தொடர்ந்து குறைவாக இருக்கும் நிலையில், நாடு முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கு தேசிய அளவிலான கொள்கையை கொண்டு வருவதற்கோ, இது தொடர்புடைய சட்டங்களை திருத்தவோ ஒன்றிய அரசு திட்டம் வைத்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள்;

மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக தேர்தல் ஆணையம், தேசிய மாற்றுத் திறனாளிகள் ஆணையம் மற்றும் நிபுணர் குழுவிடமிருந்து ஏதேனும் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

ஜனநாயக நிர்வாகத்தின் அனைத்து நிலைகளிலும் மாற்றுத் திறனாளிகளின் அரசியல் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள அல்லது மேற்கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் என்ன? ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுப்பினார்.

**2. தமிழ்நாட்டில் சூரிய மற்றும் காற்றாலை மின்சக்தி**

**ஆர்.கிரிராஜன் கோரிக்கை!**



தம்மிநாட்டில் சூரிய மற்றும் காற்றாலை மின் நிலையங்களை அமைப்பதற்கு ஒன்றிய அரசாங்கத்திடம் உள்ள திட்டம் குறித்து தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

50 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மற்றும் காற்றாலை மின் நிலையங்களை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்கள், கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட 50 மெகாவாட் அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவப்பட்ட திறன் கொண்ட சூரிய மின் நிலையங்கள் மற்றும் காற்றாலை மின் நிலையங்களின் பட்டியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் நிலையங்களை நிறுவுவதில் அமைச்சகம் மற்றும் REC லிமிடெட், PFC லிமிடெட் போன்ற மின் நிதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மானியம் மற்றும் இந்த மின் நிலையங்களின் தற்போதைய நிலை குறித்த விவரங்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு ஆதாரங்களில் இருந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் 2030 ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு என்ன என்பது குறித்து விரிவான பதிலளிக்குமாறு ஒன்றிய அரசிடம் அவர் கேட்டுள்ளார்.

**3. விளைபொருட்கள் போக்குவரத்தில் சிரமங்கள் நடவடிக்கை என்ன?**

**தருமபுரி ஆ.மணி கேள்வி!**



விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை சந்தைகளுக்கு கொண்டு செல்வதில் அதிக சிரமங்களை எதிர்கொள்வது குறித்து கவலை தெரிவித்து அதற்கு ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களவையில் தி.மு.க. எம்.பி. ஆ.மணி தன் கேள்விகளை முன்வைத்துள்ளார்.

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை முக்கிய சந்தைகளுக்கு கொண்டு செல்வதற்கும், தங்கள் விளைபொருட்களுக்கு சிறந்த விலையைப் பெறுவதற்கும், தமிழ்நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில் போக்குவரத்து சிக்கலைச் சமாளிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அதிக லாபத்திற்காக முக்கிய சந்தைகளுக்கு எளிதாக எடுத்துச் செல்லக்கூடிய வகையில் அரசாங்கம் எதிர்நோக்கும் மாற்று வழிகள் பற்றிய விவரங்கள்; மற்றும்

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுக்க முன்மொழிகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

நூறு நாள் வேலை திட்டத்தின் நிதி ஒதுக்கீடு குறித்து நாடாளுமன்றத்தில் தொடர்ந்து கேள்வி எழுப்பி வரும் தி.மு.க. எம்.பி.க்கள்.

**4. நூறு நாள் வேலை திட்டத்தை நிறுத்துகிறதா ஒன்றிய அரசு?**

**சேலம் செல்வகணபதி கேள்வி!**



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் ஒன்றிய அரசு நிதி வெளியிடாதது குறித்து பல மாநில அரசுகள் கேள்வி எழுப்பியுள்ளதை சுட்டிக்காட்டி நாடாளுமன்றத்தில் திமுக மக்களவை உறுப்பினர் செல்வகணபதி பேசியுள்ளார். நூறு நாள் வேலை திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை பல ஆண்டுகளாக ஒன்றிய அரசு குறைத்து வருவது ஏன் என்றும் ஒன்றிய அரசுக்கு இத்திட்டத்தை முழுவதுமாக நிறுத்திவிடும் திட்டம் இருக்கிறதா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

**5. தமிழ்நாட்டில் நூறு நாள் வேலை திட்டத்தின் பயனாளிகள் எண்ணிக்கை**

**தமிழச்சி தங்கபாண்டியன்**



கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் (MGNREGS) இதுவரை வேலைவாய்ப்பு பெற்ற நபர்களின் எண்ணிக்கை மற்றும் நாட்களின் விவரங்கள் குறித்து தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில், இத்திட்டத்திலுள்ள நிதி பற்றாக்குறைகள், நிலுவையில் உள்ள ஊதியம், பிரதான் மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்படுவது மற்றும் தாமதமாவது என பல்வேறு விசயங்கள் குறித்து கேட்டுள்ளார்.

கிராமப்புற சாலை மேம்பாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டின் தெற்கு மாவட்டங்களில், மாநிலங்களுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வை நிவர்த்தி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் கிராமப்புற திட்டமிடல் மற்றும் சிறந்த நடைமுறைகளை ஒன்றிய அரசு தமிழ்நாடு மாதிரியை தேசிய அளவில் கொண்டு செல்ல வகுத்துள்ள திட்டங்கள் குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

**6. நூறு நாள் வேலை திட்டத்தை விரிவுபடுத்துக!**

**கள்ளகுறிச்சி மலையரசன் கோரிக்கை!**



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் (MGNREGS) சிறப்பம்சங்களை விளக்கக் கோரி நாடாளுமன்றத்தில் கள்ளக்குறிச்சி திமுக மக்களவை உறுப்பினர் மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குள் அத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குள் MGNREGS ஐ செயல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் அளவு? நிலையான வாழ்வாதாரங்களை வழங்குதல், கிராமப்புற உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் வறுமையை ஒழித்தல் ஆகியவற்றில் அதன் செயல்திறனை அளவிடுவதற்கு MGNREG திட்டத்தின்கீழ் அரசு செய்துள்ள மதிப்பீட்டு விவரங்கள் என்ன? வெறும் உடல் உழைப்புக்கு அப்பால் திறன் வாய்ப்புகள் அல்லது வாழ்வாதார உருவாக்கத்தில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் MGNREG திட்டத்தை விரிவுபடுத்த அல்லது சீர்திருத்த அரசாங்கத்திடம் உள்ள திட்டங்கள் என்ன? மேலும் பணி தரத்தை மேம்படுத்துதல் மற்றும் மேலாண்மைக்கான தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பது ஆகியவை குறித்த திட்டங்கள் என்ன என அவர் விரிவான விளக்கம் கோரியுள்ளார்.

**7. நூறுநாள் வேலை திட்டத்தின்கீழ் உள்ள நிலுவைத் தொகைகள் எவ்வளவு?**

**தங்க தமிழ்செல்வன் கேள்வி!**



கடந்த மூன்று ஆண்டுகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்பட்ட மொத்த தொகையை ஆண்டுவாரியாக வெளியிடுமாறு இன்று நாடாளுமன்றத்தில் தேனி மக்களவை உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் ஒன்றிய அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார். 20242025 நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ரூ. 4034 கோடி நிலுவைத் தொகையை ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்காதது ஏன் என்றும் அவர் கேட்டுள்ளார்.

**8. நூறு நாள் வேலை திட்டத்தில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு!**

**பொள்ளாச்சி ஈஸ்வரசாமி**



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பெண்களின் வேலைவாய்ப்பு விகிதம் (MGNREGS) கிராமப்புறங்களில் பல ஆண்டுகளாகக் குறைந்துள்ளதற்கான காரணங்கள் குறித்து பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில், மாநிலம்/யூனியன் பிரதேசங்கள் வாரியாக, MGNREGS இன் கீழ் வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை என்ன? MGNREGS இன் கீழ் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பை அதிகரிக்க அவர்களுக்கு நிலையற்ற/அட்டவணை வேலைகளை வழங்க அரசாங்கம் முன்மொழிகிறதா? அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும் இது தொடர்பாக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள்? என்றும் அவர் கேட்டுள்ளார்.